தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.
ந.க.எண் 31158/ஜெ2/–4 நாள். 04.03.2014

பொருள் : தமிழ்நாடு தொடக்கக் கல்வி – கல்வி தகவல் மேலாண்மை முறை (Educational Management Information System – EMIS) – தனி நபர் தகவல் தொகுப்பு முறை (Personnel Information System - PIS) – ஆசிரியர்களின் பணி விவரங்கள் இணையதளமூலமாக பதிவு செய்தல் விவரங்கள் – சார்ந்து.

பார்வை தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 31158/ஜெ2/–2 நாள். 21.01.2014

***

தொடக்கக் கல்வி இயக்ககத்தில் பணியாற்றும் அனைத்து வகை ஆசிரியர்களின் (Teachers Profile) பணி விவரங்களை (www.agaram.tn.gov.in/deepinfosys) இணையதள முகவரி மூலமாக பதிவு செய்ய 27.01.2013 அன்று தொடக்கக் கல்வி இயக்ககத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு பதிவு செய்யும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. இப்பணியினை 15.03.2014க்குள் பதிவு செய்து முடிக்கப்பட வேண்டும் என அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஒன்றிய/மாவட்ட அளவில் பணியாற்றும் அனைத்து அமைச்சுப்பணியாளர்களின் விவரங்களை ஆன்லைனில் பதிவு செய்யும் பொருட்டு கடந்த நவம்பர் மாதம் பயிற்சி அளிக்கப்பட்டு பதிவு செய்யும் பணி நடைபெற்று வந்தது, **ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்களின் விவரங்களை** பதிவு செய்த விவரங்களை பதவி வாரியாக மாவட்ட அளவில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 15.03.2014 அன்று deeaeostatistics@gmail.com மின்னஞ்சலில் தவறாமல் அனுப்புமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

இணைப்பு: படிவங்கள் : **F1 முதல் F9 வரை**

தொடக்கக் கல்வி இயக்குநர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.